# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 18, 2025

Weekly E-paper ● October 18, 2025



# அறிவுசூழ் உலகம் அன்பு மயமாகட்டும்!

சுப. வீரபாண்டியன்

## கோரியது சி.பி.ஐ விசாரணை அல்ல. நீதி விசாரணை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## பொய் பேசும் பயில்வான்

தலையங்கம்

## இறக்குமதி செய்யப்பட்ட தீபாவளி தமிழர் திருநாள் அல்ல!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 18, 2025

Weekly E-paper ● October 18, 2025


# அறிவுசூழ் உலகம் அன்பு மயமாகட்டும்!

சுப. வீரபாண்டியன்



தமிழ்நாடு சட்டமன்றத்தில் 17.10.25 அன்று, புதியதோர் ஆணையத்தை நியமித்து முதலமைச்சர் உரையாற்றியுள்ளார்!

அறிவில் உயர்ந்தும், ஆற்றல் மிகுந்தும் விளங்கினாலும், சமூகத்தை விட்டுச் சாதி இன்னும் விலகவே இல்லை என்பதைத்தான் அவ்வப்போது நடந்து வருகிற ஆணவக் கொலைகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆணவக் கொலை என்பது, மானுட சமூகத்தின் அநாகரிகம், அவமானம்!

இதனைத் தன் உரையில் சுட்டிக் காட்டி இருக்கிற முதலமைச்சர், அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து சொல்ல, உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில், சட்ட வல்லுநர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்களைக் கொண்ட ஓர் ஆணையம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்! அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஆணவக் கொலைகளை ஒழிப்பதற்கான தனிச்சட்டம் இயற்றப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்!

ஏற்கனவே தமிழ் நாடெங்கும் உள்ள, பட்டியலின மக்கள் வாழும் பகுதிகளைச் சுட்டிக்காட்டும் காலனி என்னும் சொல்லை நீக்க வேண்டும் என்றும், அனைத்து இடங்களிலும் சாதிப் பெயர்கள் அகற்றப்பட வேண்டும் என்றும், மாணவர் விடுதிகளில் காணப்பட்ட சாதிப் பெயர்களை நீக்கி, சமூக நீதி விடுதி என்று பெயரிட வேண்டும் என்றும் ஆணைகளை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசு, இப்போது இந்த ஆணையத்தை அமைப்பதற்கான முயற்சியில் இறங்கி உள்ளது!

மிக நுட்பமாக, இதுபோன்ற ஆணவக் கொலைகளுக்குப் பின்னால், பெண்கள் தங்கள் விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமையைச் சிதைக்கும் ஆணாதிக்கமும் உள்ளது என்பதை முதலமைச்சர் எடுத்துக்காட்டியிருக்கிறார்!

அண்மையில் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட, ஆணவக் கொலை எதிர்ப்புத் தீர்மானத்தையும் முதலமைச்சர் சுட்டி காட்டி இருக்கிறார்!

இறுதியாக, அறிவு மயமாக ஆகியிருக்கும் இந்த உலகம், இன்னும் அன்புமயமாக ஆகவில்லையே என்னும் தன் வருத்தத்தையும் அவர் பதிவு செய்திருக்கிறார்!

அறிவு உலகத்தை வளர்க்கலாம். ஆனால் அன்புதான் உலகத்தை ஆள வேண்டும் என்னும், மிக உயர்ந்த - வாழ்விற்குத் தேவையான செய்தியோடு தன் உரையை அவர் நிறைவு செய்திருப்பது, சட்டம் மட்டுமே போதுமானதில்லை, சமூக மாற்றமும் உடனடித் தேவை என்பதைப் புரிய வைக்கிறது! ●

# கோரியது சி.பி.ஐ விசாரணை அல்ல. நீதி விசாரணை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

இந்திய உச்சநீதிமன்றம் அண்மையில் "கரூர் கொடுந்துயர் குறித்து மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ) விசாரிக்க வேண்டும். சி.பி.ஐ விசாரணையை மேற்பார்வையிட ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்படும். இரண்டு மூத்த காவல்துறை அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம் பெறுவர். இந்த இருவரும் தமிழ்நாடு பிரிவு ஐ.பி.எஸ் அதிகாரிகளாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்களாக இருக்கக்கூடாது" என்று உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகம், பாதிக்கப்பட்டவர்களான பன்னீர்செல்வம், பிரபாகரன், செல்வராஜ் மற்றும் பா.ஜ.க வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். த.வெ.க கோரியது சி.பி.ஐ விசாரணை அல்ல. நீதி விசாரணை மட்டுமே. மற்ற நான்கு மனுதாரர்கள் சி.பி.ஐ விசாரணை கோரியிருந்தனர். இந்நிலையில் இரண்டு கோரிக்கைகளையும் இணைத்து இப்படி ஒரு உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ளது. சி.பி.ஐ விசாரணை பற்றி உச்சநீதிமன்றமே கேட்டறிய வாய்ப்பு இருக்கும் போது இடையில் மூவர் குழு நியமிக்கப்படுவதன் அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது.



கரூர் நெரிசலில் பலியான ஒன்பது வயது சிறுவன் ப்ரீத்திக்கின் தாயார் ஷர்மிளா "சிறுவனின் தந்தையான பன்னீர்செல்வம் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக மனைவியையும், குழந்தையையும் பிரிந்து வாழ்வதாலும், பலியான சிறுவனின் இறுதிச்சடங்குக்குக் கூட அவர் வரவில்லை என்பதாலும், பணத்திற்காகவே அவர் தற்போது இதில் தலையிட்டுள்ளார் என்பதாலும் அவருக்கு இது குறித்து வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை" என்று உச்ச நீதிமன்றத்திலேயே காணொளி மூலம் தனது ஆட்சேபணையைத் தெரிவித்துள்ளார். அதே போன்று பலியான சந்திராவின் கணவர் செல்வராஜ் தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்யவில்லை என்றும் தன்னிடம் அ.தி.மு.க நிர்வாகி ஒருவர் போலியாகக் கையெழுத்தைப் பெற்றதன் மூலம் இந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்று உச்ச நீதிமன்ற விசாரணையில் காணொளி மூலம் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளார். கூட்ட நெரிசலில் தனது தங்கை மற்றும் மாப்பிள்ளையை இழந்த பிரபாகரன் என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது முதல் தற்போது வரை தான் மனுவில் கையெழுத்திட்டது குறித்து மாற்றி மாற்றிப் பேசி வருகிறார். பாஜகவைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ். மணிக்கு இந்த வழக்கைத் தொடர எந்த அடிப்படையும் இல்லை. ஆகவே சி.பி.ஐ விசாரணை கோரி வழக்கு தாக்கல் செய்த இந்த நான்கு மனுதாரர்களின் மனுக்களும் ஏற்றுக்கொள்ள இயலாதவை என்பதால் அவற்றின் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால உத்தரவு நீடித்து நிலைக்கத்தக்கதல்ல.

தமிழ்நாட்டில் அமலில் இருக்கும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு காரணமாக தனக்கு சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று வழக்கு தொடர்ந்து இட ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த செண்பகம் துரைராஜன் உண்மையில் சென்னை மருத்துவக் கல்லூரியில் விண்ணப்பிக்கவே இல்லை என்பது பிறகு தெரிய வந்தது. அதே போல் இந்த வழக்கும் போலியாகத் தொடரப்பட்டிருக்கிறது என்று தெரிந்த பிறகும் உச்ச நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. தேவைப்பட்டால் மோசடியான மனுத்தாக்கல் குறித்து சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிடப்படும் என்று கூறுகிறது உச்சநீதிமன்றம். சி.பி.ஐ விசாரணை கோரிய மனுக்களே மோசடியானவை எனும் போது அதை சி.பி.ஐ விசாரிப்பது எவ்வாறு நேர்மையானதாக இருக்கும்.

சி.பி.ஐ விசாரணையை மேற்பார்வையிட அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவரான அஜய் ரஸ்தோகி இந்தியாவின் மிகப்பெரிய கொடூரமான கொலை மற்றும் பாலியல் வன்புணர்வு வழக்கான பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை குறைப்பை வழங்கியவர் என்பதும், பின்னர் அவர் வழங்கிய தண்டனை குறைப்பு உச்சநீதிமன்ற மேல்முறையீட்டில் ரத்து செய்யப்பட்டதும் அவர் தலைமையிலான இந்த விசாரணை மீது நம்பிக்கை இழக்க செய்கிறது. தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட ஐ.பி.எஸ் அதிகாரிகள் இக்குழுவில் இடம்பெறக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பது மிகவும் தவறானது. தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் பணி அதிகாரிகளின் கண்ணியத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பொய் பேசும் பயில்வான்



தமிழ்நாடு சட்டப்பேரவையில் கரூர் உள்ளிட்ட பிரச்சனைகளை விவாதிக்க வேண்டும் என்றால் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரலாம். அதைவிட்டுவிட்டு எடப்பாடி, தன் கட்சி உறுப்பினர்களுடன் கருப்புப் பட்டையைக் கையில் கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்.

இதைப்பார்த்த பேரவைத் தலைவர், “கருப்புப் பட்டை கட்ட, உடனே எல்லாருக்குமா ஒன்று போல பிபி கூடியிருச்சோ என்று நினைத்தேன்” எனக் கேட்டார் ஒரு புன்முறுவலுடன். அமைச்சர் ரகுபதி அவர்கள் "சிறையில் கைதிகள் இப்படித்தான் கட்டியிருப்பார்கள்"

என்று ஒரு போடுபோட்டார்.

கரூரில் நடந்தவைகளைக் கோர்வையாக, மக்களுக்குச் சொல்ல வேண்டிய செய்திகளை உரிய சான்றுகளுடன் நம் முதல்வர் பேரவையில் மிகத் தெளிவாகப் பேசினார்.

கரூர் துயரச் சம்பவத்தின் ஊசலாட்டப் பேச்சும், அதை அரசியலாக்க முயல்வதைக் கவனித்த முதலவர், தூத்துக்குடி துப்பாக்கிசூடு பற்றி நான் சொல்லட்டுமா? என்று கேட்டபோது, குரலடங்கிவிட்டார், எடப்பாடி.

அதுசரி அவர் ஏன் வெளிநடப்பு செய்தார்? பேரவையில் முதல்வர் கரூர் சம்பவத்தைப் பற்றி விளக்கம் அளித்து விட்டாராம். அதுவும் எடப்பாடி கேள்வி கேட்கும் முன்பே முதல்வர் கரூர் பற்றி விளக்கம் அளித்து விட்டாராம். முறுக்கிக் கொண்டு வெளியே போய்விட்டார்.

அமைச்சர் ரகுபதி எடப்பாடியை மிகச்சரியாக எடை போட்டிருக்கிறார், பேரவையில். அவர் சொல்கிறார், "போரில் வாள் சுழற்ற முடியாத வீரன், வீட்டில் வில் வித்தை காட்டினானாம்! கரூர் விவகாரத்தில் சட்டமன்றத்தில் ஆணித்தரமாகப் பேச முடியாத எதிர்க் கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி, வெளியே போய் பயில்வான் வேடம் போட்டிருக்கிறார்".

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

இந்த உத்தரவு வன்மையாக கண்டிக்கத்தக்கது. குஜராத்தைச் சேர்ந்த குற்றவாளிகளுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த குஜராத்தை சேர்ந்த ஒரு நீதிபதியின் தலைமையில் குழுவை அமைத்து விட்டு, அக்குழுவில் சொந்த மாநிலத்தைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகளை நியமிக்க கூடாது என்று கூறுவது வியப்பிற்குரியது.

சென்னை உயர் நீதிமன்றம் அமைத்த சிறப்புப் புலனாய்வு குழு விசாரணை ஆரம்ப நிலையில் தான் உள்ளது. அக்குழுவின் விசாரணையில் பாரபட்சம், உண்மையை மறைப்பது, பழி வாங்கும் நடவடிக்கை போன்ற ஏதேனும் தவறு நேர்ந்தால் அக்குழுவை கலைக்கலாமே தவிர தற்போது அவ்வாறு செய்வது தவறானது.

சி.பி.ஐ விசாரணை நடத்தப்பட இருப்பதால் தமிழ்நாடு அரசு நியமித்த நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய விசாரணை தேவையற்றது என்று கூறி அதையும் கலைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக ஒரே நேரத்தில் சி.பி.ஐ விசாரணையும், நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய விசாரணையும் நடைபெற்ற முன்னுதாரணம் இருக்கும் பொழுது இப்போதைய உத்தரவு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

சி.பி.ஐ விசாரணை குறித்து ஒவ்வொரு மாதமும் அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழுவிற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளதன் மூலம் இந்த வழக்கு விசாரணையை மாதக் கணக்கில் இழுத்தடிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய உச்சநீதிமன்ற உத்தரவு நீதியின் மீதான நம் நம்பிக்கையை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளது. "நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடியாக ஒரு தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்படும் நிலையில் அந்த தீர்ப்பு ரத்து செய்யப்படும்" என்று பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. அந்த வகையில் இந்த வழக்கில் சி.பி.ஐ விசாரணை கோரியவை மோசடி மனுக்கள் என்று அடுத்தடுத்த விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டால் இந்த இடைக்கால உத்தரவு ரத்து செய்யப்படும் வாய்ப்பு இருக்கிறது. நீதி நெடுநாள் உறங்காது !!

# இறக்குமதி செய்யப்பட்ட தீபாவளி தமிழர் திருநாள் அல்ல!

தீபாவளி தமிழ்நாட்டின் மரபுவழிப் பொருளாதாரத்தோடும், பருவநிலைகளோடும், சடங்குகளோடும் தொடர்பில்லாத ஒரு திருவிழா. பார்ப்பனியத்தின் பாதிப்புகளில் இருந்து இன்னமும் விலகி நிற்கிற சிற்றூர்களில் தீபாவளி கொண்டாடப்படுவதில்லை. தீபாவளியின் அடையாளமான வெடி அதன் மூலப்பொருளான வெடிமருந்து ஆகியவை தமிழ்நாட்டிற்கு 15ஆம் நூற்றாண்டு வரை அறிமுகமாவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.





விளக்குகளின் வரிசை எனப்பொருள்படும் தீபாவளி (தீப+ஆவளி) என்னும் வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லும் புழக்கத்தில் இல்லை. தமிழர்களின் விளக்குத் திருவிழா என்பது திருக்கார்த்திகைத் திருவிழாவே. நரகாசுரன் எனும் அரக்கன் கிருஷ்ணனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தீபாவளிக் கதை, திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக பிராமணிய மதத்தின் சார்பாக எழுந்த கதையாகும்.

இந்த நாளே பிராமணிய மதத்தின் எதிரியான சமண மதத்தின் 24ஆம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறு அடைந்த (இறந்த) நாளாகும். தான் இறந்தநாளை வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடுமாறு மகாவீரர் தம்மதத்தவரைக் கேட்டுக் கொண்டார். ஆகவே பிராமணிய மதத்தின் பழைய எதிரிகளான சமணர்களும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். எனவே நரகாசுரன் அழிந்ததாக பிராமணியத் தீபாவளிக் கதைகள் குறிப்பிடுவது மகாவீரர் இறந்த நாளேயாகும். விசயநகரப் பேரரசான, 'இந்து சாம்ராஜ்யம்' தமிழ்நாட்டில் நுழைந்த கி.பி.15ஆம் நூற்றாண்டு தொடங்கியே தீபாவளி இங்கு ஒருதிருநாளாகக் கொண்டாடப் படுகிறது. இந்தக் காரணம்பற்றியே தமிழ்ப் பிராமணர்களைவிட, தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கு பிராமணர்களே தீபாவளியை 'பக்தி' சிரத்தையுடன் கொண்டாடுகின்றனர். வடநாட்டு இந்துக்களிடமும், சமணர்களிடமும் இல்லாதபடி தமிழ்நாட்டில் இத்திருவிழா நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றனர். எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பது தமிழ்நாட்டில் நீத்தார் நினைவில் இறுதிநாளைக் குறிக்கும் சடங்காகும்.

தமிழ்நாட்டுப் பிராமணர்களும் இத்திருவிழாவை இறந்தார் இறுதிச் சடங்கு போல 'கங்கா ஸ்நானம்' செய்து கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே உண்மையில் இத்திருவிழா பார்ப்பனிய மதத்தின் திருவிழாவே அன்றி தமிழர் திருவிழா ஆகாது.

'நரகனைக் கொன்ற நாள் நல்ல நாள் விழாவா?' என்று பாரதிதாசன் பாடுவது இங்கே நினைவுக்கு உரியது.

**- பேராசிரியர் தொ.பரமசிவம்** எழுதிய **'அறியப்படாத தமிழகம்'** நூலிலிருந்து

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian